### இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 25 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# ரூ.50.79 கோடியில் 15 முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

சென்னை. பிப். 18-

**இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.121.43 கோடி மதிப்பீட்டிலான 25 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.50.79 கோடி செலவிலான 15 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 121 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 திருக்கோயில்களில் 24 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, 50 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 15 முடிவுற்ற திட்டப்பணிகளைகாணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 2,608 திருக்கோயில்களில் குடமுழுக்கு, திருத்தேர்களை பழுது பார்த்து வீதி உலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒரு கால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றத்திலிருந்து இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக சீரிய முறையில் செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப் பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**16 திருக்கோயில்களில் 24 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னை, எழும்பூர், சீனிவாசப் பெருமாள் திருக்கோயிலில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரம், பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணி; திருவள்ளூர் மாவட்டம், சிறுவாபுரி, பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் 16.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி: சென்னை, கோவில்பதாகை, சுந்தரராஜ பெருமாள் திருக்கோயிலில் 13.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுக்கள் காப்பகம் அமைக்கும் பணி; ஈரோடு மாவட்டம், பண்ணாரி, பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் 8.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் வளாகத்தில் மூன்று பொது சுகாதார வளாகங்கள், திருமண மண்டபம் பழுது பார்த்தல் மற்றும் கூடுதல் கட்டடம் கட்டும் பணிகள்; நாமக்கல், நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 7.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி;

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், கந்தசாமி திருக்கோயிலில் 6.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; சென்னை, பூங்கா நகர், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் சார்பில் 4.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய பல்நோக்கு வளாகங்கள் கட்டும் பணிகள்; கன்னியாகுமரி மாவட்டம், வேளிமலை, குமாரசுவாமி திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; தேனி மாவட்டம், வீரபாண்டி, கௌமாரியம்மன் திருக்கோயிலில் 2.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், இடுகம்பாளையம், அனுமந்தராயசுவாமி திருக்கோயிலில் 2.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டும் பணி; சென்னை, இராயப்பேட்டை, பெரிய பாளையத்தம்மன் திருக்கோயிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மண்டபம் கட்டும் பணி;

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை, அறப்பளீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் 1.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி; விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை, சந்திரமௌளீஸ்வரர் திருக்கோயிலில் 1.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளத் திருப்பணி; திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; மதுரை மாவட்டம், அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயில் சார்பில் சுந்தரராஜா உயர்நிலைப் பள்ளிக்கு 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளி வகுப்பறை கட்டடம் கட்டும் பணி மற்றும் 1.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயிலின் கோட்டைச் சுவர் புனரமைக்கும் பணி; மயிலாடுதுறை மாவட்டம், திருவெண்காடு, சுவேதாரண்யேசுவரசுவாமி திருக்கோயிலில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி;

**என மொத்தம் 121.43 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 24 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**7 திருக்கோயில்களில் 15 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்!**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 20.50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பொது தரிசன முறை வரிசை (Queue Complex), நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் கலையரங்கம்; மதுரை மாவட்டம், அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயிலில் வண்டி கேட் நுழைவு வாயில் முதல் சோலைமலை முருகன் திருக்கோயில் மற்றும் இராக்காயி அம்மன் திருக்கோயிலுக்கு 9.10 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலை, தடுப்புச் சுவர் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள், 2.95 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கள்ளழகர் திருக்கோயில் வளாக மேற்கு புற கோட்டைச் சுவர் மற்றும் 1.50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள பெரியாழ்வார் திருவரசு;

சென்னை, பூங்கா நகர், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் 6.75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் திருக்கோயில் பணியாளர் குடியிருப்புகள், புதிய பல்நோக்கு வளாகம் மற்றும் குடியிருப்பு; விருதுநகர் மாவட்டம், தேவதானம், நச்சாடை தவிர்த்தருளியசுவாமி திருக்கோயிலில் 3.95 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருக்குளம் திருப்பணி;


திருப்பூர் மாவட்டம், அய்யம்பாளையம், வாழைத்தோட்டத்து அய்யனார் திருக்கோயிலில் 2.10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அர்ச்சகர் குடியிருப்பு; விழுப்புரம் மாவட்டம், பெருவளூர், கோட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் 1.97 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபம்; கோயம்புத்தூர் மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் 1.97 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம், மருத்துவ மையம் மற்றும் சுகாதார வளாகம்;

**என மொத்தம் 50.79 கோடி ரூபாய் செலவிலான 15 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ. பெரியசாமி, இணை ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரிலிருந்து மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.இளம்பகவத், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்களும், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்திலிருந்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; கும்பமேளா பக்தர்கள் 18 பேர், டெல்லி ரயில் நிலையக் கூட்ட நெரிசலில் சிக்கி பலியாகி விட்டார்களே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; கும்பமேளா தொடர்பாக இது இரண்டாவது பலித் தொகுப்பு.இது ரயில் நிலைய அதிகாரிகளின் குளறுபடியினால் நேர்ந்த சோகம் !**

**ஏற்கனவே கடந்த மாதம் 29 அன்று கும்பமேளா நடந்த பிரயாக்ராஜில் 30 பேர் பலியானார்கள். இது முதல் பலித் தொகுப்பு! உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசின் நிர்வாகக் குளறுபடிகளினால் நேர்ந்த சோகம் !**

**கும்பமேளா என்பது 'துன்ப மேளாவாக - சோக மேளாவாக' முடிந்து விட்டதே என்று தேசமே கவலையில் தேம்புகிறது !**

**144 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் கும்பமேளாவாம் இது. இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 144 - ஆவது பிரிவு, மனித உயிருக்கும், நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் கேடு விளையும் என்றால் அந்தத் தடைச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தலாம் என்று வரையறுக்கப்பட்டிருப்பதோடு, இந்த 144 ஆண்டுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சோகம் இன்னும் ஆழமாகத் துளைக்கிறதே !**

### தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்றிட வேண்டும்!

# வரி வசூல் நடவடிக்கைகளில் பாரபட்சம் கூடாது!

## மதுரையில் 11 மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

மதுரை, பிப். 18 -

**வரி வசூல் நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்றும், இதில் எந்தவித பாரபட்சமும் கூடாது என்றும் நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அறிவுறுத்தினார்.**



மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் மதுரை, திண்டுக்கல், தேனி, கரூர், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களுக்கு உள்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் செயல்படுத்துப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது: -

தமிழகத்தில் 134 நகராட்சிகள், 24 மாநகராட்சிகளில் கடந்த 4 ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம், சீர்மிகு நகரத் திட்டம், மூலதன மானிய நிதி, அம்ருத் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்), நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள், ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி, ஜெர்மன் வங்கி நிதியுதவி மூலம் மொத்தம் ரூ.29,084 கோடியில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர் வசதி, புதை சாக்கடை வசதி போன்ற பல உள்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மாநிலம் முழுவதும் கடந்தாண்டு 5.50 லட்சம் எல்.இ.டி. தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், விடுப்பட்ட பகுதிகளில் அமைப்பதற்கு கூடுதலாக 1.50 லட்சம் எல்.இ.டி.விளக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் திண்டுக்கல் மாவட்ட குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.1446.12 கோடி, கரூர் மாவட்டத்துக்கு ரூ.522.04 கோடி, மதுரை மாவட்டத்துக்கு ரூ.2008.70 கோடி, விருதுநகர் மாவட்டத்துக்கு ரூ.2027.40 கோடி, தேனி மாவட்டத்துக்கு ரூ.780.89 கோடி, சிவகங்கை மாவட்டத்துக்கு ரூ.1952.73 கோடி, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.3,289.28 கோடி, திருநெல்வேலி மாவட்டத்துக்கு ரூ.1450.22 கோடி, தென்காசி மாவட்டத்துக்கு ரூ.226.59 கோடி, தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ.572.54 கோடி, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ரூ.508.22 கோடி, புதை சாக்கடை திட்டத்துக்கு விருதுநகர் மாவட்டத்துக்கு ரூ.596.84 கோடி, தேனி மாவட்டத்துக்கு ரூ.41.72 கோடி, சிவகங்கை மாவட்டத்துக்கு ரூ.140.13 கோடி, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.52.60 கோடி, தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ.368.52 கோடி, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ரூ.129.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டுதோறும் ரூ. 24 ஆயிரம் கோடி நிதியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒதுக்கீடு செய்து வருகிறார்.

எனவே, திட்டப் பணிகளை ஆணையர்கள், செயல் அலுவலர்கள், அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். வரி வசூல் தொடர்பாக சில குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

வரி வசூல் தொடர்பான நடவடிக்கைகளில் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இதில், எந்தவித பாரபட்சமும் கூடாது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தினார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அர.சக்கரபாணி, வி.செந்தில்பாலாஜி, பி. மூர்த்தி, மக்களவை உறுப்பினர்கள் கனிமொழி (தூத்துக்குடி), சு.வெங்கடேசன் (மதுரை), தங்கதமிழ்ச்செல்வன் (தேனி), ராணி ஸ்ரீகுமார் (தென்காசி), ராபர்ட் புரூஸ் (திருநெல்வேலி), முதன்மைச் செயலர் கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, மேயர் வ.இந்திராணி, மாவட்ட ஆட்சியர் மா. சௌ. சங்கீதா, மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண்குராலா, 11 மாவட்டங்களைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேயர்கள், ஆணையர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழகத்திற்கு கல்வி நிதி வழங்க முடியாது என ஒன்றிய அரசு 'பிளாக் மெயில்'

# உரிமைக் காக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் !

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, பிப். 18-

தமிழகத்திற்கு நியாயமாக வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு 'பிளாக் மெயில்' செய்து வருகிறது. மாநில உரிமையைக் காக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 17.2.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-



தினகரன்

பிப்ரவரி 17, 2025 திங்கட்கிழமை

தமிழகம் அடிபணியாது

மக்களின் மத்தியில் எப்படியாவது இந்தியை திணித்து விடுவது என்ற முடிவோடு ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாகவே செயல்பட்டு வருகிறது. பிரதமர் மோடி தலைமையிலான பாஜ அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்தே இந்தி மொழியை எப்படியாவது தேசிய மொழியாக மாற்றிட வேண்டும் என்கிற முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர். சில மாநிலங்கள் அதற்கு செவிசாய்த்தும் விட்டன. தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மட்டுமே இன்னமும் துடிப்போடு, ஒன்றிய அரசிடம், மாநில சுயாட்சிக்காக மல்லுக்கட்டி வருகின்றன. இப்போது ஒன்றிய அரசு சமக்ர சிக்சா அபியான் திட்டத்தில் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தி, தமிழகத்தில் இந்தியை திணிக்க முற்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகத்திற்கு வர வேண்டிய ₹2 ஆயிரத்து 152 கோடி நிதி இதுநாள் வரை வழங்கப்படவில்லை.

மக்கள் மத்தியில் எப்படியாவது இந்தியை திணித்து விடுவது என்ற முடிவோடு ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாகவே செயல்பட்டு வருகிறது. பிரதமர் மோடி தலைமையிலான பாஜ அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்தே இந்தி மொழியை எப்படியாவது தேசிய மொழியாக மாற்றிட வேண்டும் என்கிற முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர். சில மாநிலங்கள் அதற்கு செவி சாய்த்தும் விட்டன. தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மட்டுமே இன்னமும் துடிப்போடு, ஒன்றிய அரசிடம், மாநில சுயாட்சிக்காக மல்லுக்கட்டி வருகின்றன.

இப்போது ஒன்றிய அரசு சமக்ர சிக்சா அபியான் திட்டத்தில் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தி, தமிழகத்தில் இந்தியை திணிக்க முற்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகத்திற்கு வரவேண்டிய ரூ.2 ஆயிரத்து 152 கோடி நிதி இதுநாள் வரை வழங்கப்படவில்லை. தேசிய கல்வி கொள்கையின்படி இந்தியாவில் உள்ள மாநிலங்கள் தாய் மொழி, ஆங்கிலம் மற்றும் 3வது மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டுள்ள சூழலில், தமிழ்நாடு மட்டுமே இதனை ஏன் ஏற்க மறுக்கிறது என ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கேள்வி எழுப்பியுள்ளார்.

3வது மொழியை ஏற்கும் வரையில் தமிழகத்திற்கு நிதி வழங்க முடியாது என 'பிளாக்மெயில்' பாணியில் ஒன்றிய அமைச்சர் பேசியிருப்பது பலரது கண்டனத்தையும் பெற்றுள்ளது. தமிழகத்தின் இந்தி எதிர்ப்பு வரலாறு, ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு தெரிய வாய்ப்பில்லை. 1937ம் ஆண்டு தொடங்கி மதராஸ் மாகாணத்தில் இந்தியை விதைக்க முயன்ற போது, இங்கு ஏற்பட்ட மாணவர்கள் எழுச்சியும், சிறை நிரப்பும் போராட்டங்களும் வரலாற்றில் இன்றும் இடம் பெற்றுள்ளன.

பிரிட்டிஷ் அரசாங்கமே தமிழகத்தில் இந்தி கட்டாயம் என்ற உத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டது. 1965ம் ஆண்டில் இந்தி திணிப்புக்கு எதிராக திமுக களம் இறங்கியபோது, அதனோடு கைகோர்த்து மாணவர்களும், இளைஞர்களும் திரண்டனர். இறுதியில் தமிழகம் ஆட்சி மாற்றத்தையே எதிர்கொண்டது. 1986ம் ஆண்டில் கூட ஒன்றிய அரசின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனைத்தும் இந்தியில் வரும், இந்தியா முழுவதும் நவோதயா பள்ளிகள் திறக்கப்படும் உள்ளிட்ட உத்தரவுகளை களத்தில் நின்று போராடியே தடுத்து நிறுத்திய பெருமை தமிழ் மக்களுக்குண்டு.

இப்போது மீண்டும் ஒன்றிய கல்வி அமைச்சர் மும்மொழி கொள்கை என்ற பெயரில் முருங்கை மரம் ஏற தொடங்கியுள்ளார். இத்தகைய பிளாக்மெயிலுக்கெல்லாம் தமிழகம் அடிபணியாது என கூறியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், 'உங்கள் தனிச்சொத்தை கேட்பது போல் திமிராக பேசினால், தமிழர்களின் தனிக்குணத்தை டெல்லி பார்க்க வேண்டியது வரும்' என எச்சரித்துள்ளார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எந்தவொரு பிரிவிலும் மும்மொழி கொள்கை இடம் பெறாதபோது, ஒன்றிய அரசு தான் முடித்த முயலுக்கு 3 கால்கள் எனக் கூறி மும்மொழியை திணிக்க அடம் பிடிக்கிறது.

இந்திய ஒன்றியம் என்பது மாநிலங்களால் ஆனது என்பதை ஒன்றிய அரசும், அதன் ஆட்சியாளர்களும் அடிக்கடி மறந்து விடுகின்றனர். இந்தியை எதிர்க்க தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில், அதிமுக வழக்கம் போல் அடக்கியே வாசிப்பதும் பொதுமக்கள் மத்தியில் விவாத பொருளாக மாறி வருகிறது. மாநிலத்தின் உரிமையை காக்க அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டிய நேரமிது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்சிக்கு வருகை தரும்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !

திருச்சி, பிப்.18-



திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இன்று (18.02.2025 செவ்வாய்க்கிழமை) இரவு 7.30 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வருகை தந்து திருவெறும்பூர் தொகுதியில் பெரிய சூரியூரில் ஜல்லிக்கட்டு மைதான அடிக்கல் நாட்டு விழா மற்றும் தெற்கு மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு திருமணங்களை நடத்தி வைக்க வருகை தர உள்ளார்கள். அவரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திருச்சி விமான நிலையத்தில் வரவேற்க உள்ளோம்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு,கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.